**செய்தி வெளியீடு எண்:1129** **நாள்:17.11.2021**

**<u>வ.உ.சிதம்பரனார் அவர்களின் 85ஆவது நினைவு நாள் – தியாகத் திருநாளை முன்னிட்டு இராஜாஜி சாலையில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை</u>**

நம் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டதோடு மட்டுமின்றி தனது சொத்து சுகங்களையும், சொந்த பந்தங்களையும் இழந்து அன்னியரால் இரட்டை ஆயுள் தண்டனையையும் அனுபவித்து, சிறையிலே செக்கிழுத்த தியாகச் செம்மல் கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150வது பிறந்த ஆண்டான இந்த ஆண்டில் அன்னாரின் 85ஆவது நினைவு நாளானது, **'தியாகத் திருநாள்'** ஆகக் கடைபிடிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 03.09.2021 அன்று சட்டப் பேரவையில் அறிவித்தார்கள். அதனடிப்படையில், அன்னார் மறைந்த நாளான நவம்பர் 18 நாளை காலை 9.30 மணியளவில், சென்னை இராஜாஜி சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.

அன்னாருடைய அருமை பெருமைகளையும் தியாகங்களையும் அடுத்து வருகின்ற இளம் தலைமுறையினரும் அறிந்து பயன் அடைகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாருடைய 150வது பிறந்த நாள் விழாவானது சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்படும் என்று அறிவித்து அந்நாளிலே (05.09.2021) அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதையும் செலுத்தினார்கள். அதுமட்டுமின்றி, கடந்த 03.09.2021 அன்று சட்டப் பேரவையில், இதுவரையில் எந்த முதலமைச்சரும் அறிவிக்காத வண்ணம், வ.உ.சிதம்பரனார் அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் 14 புதிய அறிவிப்புகளை அறிவித்தார்கள். அவற்றில் சென்னையிலும் கோவையிலும் அன்னாருக்கு சிலைகள், ஒட்டப்பிடாரத்தில் அவர் வாழ்ந்த நினைவு இல்லம் மற்றும் திருநெல்வேலியில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் ஒளி–ஒலிக் காட்சியுடன் புனரமைப்பு, நவீன டிஜிட்டல் முறையில் வாழ்க்கை வரலாறு குறித்த குறும்படம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் புதிய ஆய்வு இருக்கை, அவர் எழுதிய அனைத்து நூல்களும் புதுப்பிக்கப்பட்டு தமிழ்நாடு பாடநூல் கழகம் வாயிலாகக் குறைந்த விலையில் விற்பனை செய்திட ஏற்பாடு, நெல்லையில் அவர் படித்த பள்ளியில் ரூபாய் ஒரு கோடியில் கலையரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் அமைத்தல், கப்பல் கட்டுமானம் தொடர்பான தொழில்நுட்பம் மறம் போக்குவரத்து ஆகிய துறைகளில் சிறந்த முறையில் பங்காற்றும் தமிழருக்கு கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சி. விருதுடன் கூடிய 5 இலட்சம் ரொக்கப்பரிசு, தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்டங்களில் புதிதாகக் கட்டப்படும் அரசுக் கட்டடங்களுக்கு அன்னாரின் பெயர் சூட்டுதல், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக அன்னார் குறித்த இணையவழி கருத்தரங்கம், அன்னாரின் நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் அனைத்தும் இணையத்திலே மின்மயப்படுத்தி வெளியிடுதல், அன்னாரின் வாழ்க்கை வரலாற்றினை மாநிலம்

முழுவதும் உள்ள பள்ளி மாணவர்கள் கண்டு பயன் பெறுகின்ற வகையில் பேருந்து புகைப்படக் கண்காட்சி ஆகிய 14 அறிவிப்புகளை வெளியிட்டு சாதனை படைத்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான இந்த 14 அறிவிப்புகளை செயல்படுத்துகின்ற வகையில், அரசின் சார்பில் தொடர் நடவடிக்கைகளாக பல இனங்களுக்கு உரிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டும், பிற இனங்களுக்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. குறிப்பாக "விடுதலைப் போரில் தமிழகம்" என்கின்ற தலைப்பில் சென்னை கோயம்பேடு பேருந்து வளாகத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த இந்த கண்காட்சி பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பினையும் பாராட்டினையும் பெற்றுத் தந்துள்ளது என்றால் அது மிகையில்லை. மேலும், அதே நாளில் தொடங்கி வைக்கப்பட்ட வ.உ.சி வரலாறு தொடர்பான பேருந்து புகைப்படக் கண்காட்சி தற்பொழுது மாவட்ட வாரியாகப் பயணப்பட்டு வருகிறது.

நம் தாய்த் திருநாட்டின் விடுதலைக்குத் தமிழகத்திலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். அன்னார் மறைந்த நாளான நவம்பர் 18 ஆம் நாளன்று சென்னை இராஜாஜி சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள். மேலும், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் அவர் வாழ்ந்த இல்லத்திலும், திருநெல்வேலியில் உள்ள மணிமண்டபத்திலும் அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்படுகிறது.

......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**